முகூர்த்த பட்டு புடைவைக்கு
சகல விதமான
காஞ்சிபுரம் சேலை
பட்டு வேட்டி கூறை சாறி
பனாரிஸ் சேலைகளுக்கும்
சிறந்த ஒரே இடம்
கோபிகா
ஆடை அகம்
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

மக்களின் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 20269 ஆனி 30 வெள்ளிக்கிழமை (14 - 07 - 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 230

ராகமாலிகா
என இயங்கி வந்த
எமது ஸ்தாபனம்
கோபிகா
ஆடை அகம்
என பெயர்
மாற்றப்பட்டுள்ளது
4, சிறப்பு அங்காடி,
உட்புறம்,
யாழ்ப்பாணம்.

# சங்கரத்தையில் கண்ணிவெடி!

# அதிகாரி, 5 படையினர் உயிரிழப்பு!!

## 5 ராணுவத்தினர் காயம்; நேற்று மாலை சம்பவம்

கொழும்பு, ஜூலை 14

சங்கரத்தையில் நேற்று மாலை 5 மணியளவில் நிலக்கண்ணி வெடிக்கு இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற வாகனம் ஒன்று இலக்கானது என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமை அலுவலகம் தெரிவித்துள்ளது.

இச்சம்பவத்தில் இராணுவ அதிகாரி ஒருவரும் 5 படையினரும் கொல்லப்பட்டார்கள் என்றும் —

நான்கு இராணுவத்தினர் காயமடைந்தார்கள் என்றும் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (உ-3)

## யாழ். நிலைமையை விளக்க குருமார் கொழும்பு விரைவு

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தின் மீதான இராணுவத் தாக்குதலை உடனடியாக நிறுத்த அரசாங்கத்தை தூண்டுமாறு—

கொழும்பு அதிமேற்றிராணியார் மேதகு மார்க்கஸ் பெர்னாண்டோவிடம் நேரில் கோரிக்கை விடுவதற்காக—

கத்தோலிக்க மத குருமார் இருவர் கொழும்பு சென்றுள்ளனர்.

இவர்களில் ஒருவர், குண்டு வீச்சுக்கு இலக்கான நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய பங்குக்குரு ஆவார்.

இவர்கள் இருவரும் இப்போது கொழும்பில் தங்கியுள்ள, யாழ். பல்கலைக்கழக கிறிஸ்தவத் துறைத் தலைவர் கலாநிதி வண பிதா எஸ். ஜி. சந்திரகாந்தனுடன் சேர்ந்து சென்று—

அதிமேற்றிராணியாரைச் சந்தித்து யாழ் நிலைமையை விளக்குவதுடன், இராணுவத் தாக்குதல்களை நிறுத்துவதற்கு உதவுமாறும் வேண்டுகோள் விடுப்பர்.

இராணுவ நடவடிக்கையை நிறுத்தக் கோருவது தொடர்பான யாழ். பிரஜைகள் குழுவின் மகஜர் ஒன்றையும் இரு மத குருமாரும் தம்முடன் எடுத்துச் செல்வதாக அறியப்படுகிறது. (அ-10)

# முதல்கட்ட ராணுவ நடவடிக்கை முடிவு

# அடுத்தது எந்நேரமும் ஆரம்பமாகும்!

## போராளி வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை.14

''முன்னேறிப் பாய்தல்'' என்ற பெயரில் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக நடத்தப்படும் கடும் எதிர்த் தாக்குதல்களின்போது நேற்று முன்தினம் 2ஆம் லெப்ரினன்ட் வேந்தன் என அழைக்கப்படும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சோதிலிங்கம் கஜேந்திரன் என்ற போராளி வீரச்சாவடைந்தார். [ஜ-4]

## சங்கரத்தையில் ஷெல்லுக்கு நேற்று இருவர் பலி!

### சிலரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 14

சங்கரத்தைப் பகுதியில் நேற்று இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட அகோர ஷெல் தாக்குதலில் இரு பொது மக்கள் உயிரிழந்தனர்; மூவர் காயமடைந்தனர்.

நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த மாணிக்கம் சிவகுரி [வயது 19), சின்னத்துரை கண்ணலிங்கம் (வயது 31) ஆகிய இருவருமே உடல் சிதறி உயிரிழந்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த பசுபதி செல்வகுமார் (வயது 23), இராசதுரை ராஜா (17), முத்து தவராசா (வயது30) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்களுடன் கூடச்சென்ற சிலரை இச்சம்பவத்தின் பின்னர் இதுவரை காணவில்லை எனவும் —

இவர்கள் என்னவானார்கள் எனத் தெரியவரவில்லை எனவும் —

இவர்களுடன் கூடச் சென்று தப்பி வந்த சிலரால் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் [உ-15]

## அகதி முகாம்களுக்கு நேற்று செஞ். அதிகாரி விஜயம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தற்போதைய இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள அகதி முகாம்கள் எதிர்நோக்கும் சிக்கல்கள் குறித்து செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் யாழ். அலுவலக அதிகாரி ஜோர்ஜ் குன்ஸ் நேரில் ஆராய்ந்தார்.

நேற்று அவர் நகரில் உள்ள பல முகாம்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள சுகாதார, உணவு நிலை குறித்து ஆராய்ந்தார்.

சுகாதாரச் சேவைகளை முறைப்படி முகாம்களில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் நோய்கள் ஏற்படுவதை தடுக்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

முகாம்களின் நிலை குறித்து கொழும்பு அலுவலகத்துக்கு அவர் விபரங்களை அனுப்பியுள்ளார். [உ-3]

## மக்கள் மீதான தாக்குதலை நிறுத்துக!

வாஷிங்டன், ஜூலை 14

விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படைகள் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்துவதை உடன் நிறுத்த வேண்டும்.

றோமன் கத்தோலிக்க ஆயர் பேரவை மேற்கண்ட அவசர கோரிக்கையை அர

(3 ஆம் பக்கம் பார்க்க)

## ம.எண்ணெய்யுடன் "மாஹோ" நாளை வரும்

யாழ்ப்பாணம், ஜூலை 14

மண்எண்ணெய், சவர்க்காரம் உட்பட பல அத்தியாவசியப் பொருள்களுடன் 'மாஹோ' கப்பல் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று மாலை இக்கப்பல் வடக்கு நோக்கி புறப்படவிருந்ததாகவும்—

பெரும்பாலும் அது நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என்றும் —

யாழ். செயலகத்துக்கு நேற்று தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை —

கொழும்பில் தேங்காய் எண்ணெய், சவர்க்காரம் போன்ற பொருள்களை ஏற்றிக் கொண்டிருக்கும் 'லங்கா முடித' கப்பல் ஓரிரு தினங்களில் வடக்கு நோக்கி புறப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## ஸ்ரீலங்கா அரச தரப்பு அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

ஸ்ரீலங்கா அரசுப் படைகள் யாழ். குடாநாட்டில் ஆரம்பித்த "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையின் முதல் கட்டம் நேற்று முன்தினத்துடன் முடிவுற்றதாக அறிவிக்கப்படுகின்றது.

எனினும் இதன் அடுத்த கட்டம் தொடர்ந்து இடம்பெறும் என்று ஸ்ரீலங்கா அரசுத் தரப்பு அறிவித்திருக்கிறது.

குடாநாட்டில் சுமார் 78 சதுர கிலோ மீற்றர் விஸ்திரணமுள்ள பிரதேசத்தை படையினர் கைப்பற்றியுள்ளதாகவும் —

நேற்று மேற்கு அராலியைப் படையினர் கைப்பற்றினர் என்றும் —

ஸ்ரீலங்கா அரசுத்தரப்பில் அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பின்படி —

இந்த நடவடிக்கையில் இதுவரை அதிகாரி உட்பட 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்; 163 பேர் படுகாயமடைந்தனர்; இரு ஹெலிகள் சேதமாக்கப்பட்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி படைத்தளத்தைச் சுற்றி அரைவட்ட வடிவ பாதுகாப்பு வலயம்

### அதுவே பிரதான நோக்கமாம்

தற்போது வடபகுதியில் பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையின் பிரதான நோக்கம், பலாலி இராணுவ தளத்தைச் சுற்றி, அரைவட்ட வடிவிலான பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைப்பதே.

இவ்வாறு கொழும்பில் இருந்து வெளிவரும் தமிழ் நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த அரைவட்டப் பாதுகாப்பு வலயத்தின் முன்அரண் தெரிவிக்கப்பட்ட பாதுகாப்பு நிலைகளாக தொண்டமானாறு அச்சுவேலி, வசாவிளான், குரும்பசிட்டி, தெல்லிப்பளை, அளவெட்டி, உடுவில், கந்தரோடை, அராலித்துறை பொன்னாலை, சங்கானை, மூளாய், காரைநகர் ஆகிய பகுதிகள் அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## ஏவுகணைக்கு எட்டாத உயரத்தில் பறக்கும் ரஷ்ய விமானங்கள்

### தற்போதைய நடவடிக்கைக்கு உதவுகின்றனவாம்

ரஷ்யாவில் இருந்து சமீபத்தில் கொள்வனவு செய்யப்பட்ட அன்டனோவ் — 32 ராட்சத போக்குவரத்து விமானங்கள் தற்போதைய ராணுவ நடவடிக்கையின் போது படையினருக்குப் பெரும் உதவியாக இருந்து வருகின்றன என்று விமானப் படைத்தளபதி ஏயர் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா தெரிவித்துள்ளார்.

ஒருகோடி 30 லட்சம் டொலர் பெறுமதியான இந்த விமானங்கள் ஏற்கனவே குடாநாட்டில் ராணுவ நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அன்டனோவ் — 32 போக்குவரத்து விமானங்கள் ஏவுகணைகளுக்கு எட்டாத தூரத்தில் பறக்கக் கூடியவை என்றும்—

அந்த விமானங்களில் ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என்றும் கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ)

## படை நடவடிக்கை தொடர்ந்தால் உணவு, மருந்து பற்றாக்குறை வரும்

### ஜெனிவாவில் செஞ். அதிகாரி எச்சரிக்கை

ஆம்ஸ்டராம், ஜூலை 14

''யாழ். குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் மருந்து, உணவுப் பொருள்களுக்கு அங்கு பெரும் தட்டுப்பாடு [illegible] லாம்''

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஜெனிவா அலுவலக அதிகாரியான ஒஸ்ஸ் போக்லண்ட் மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார்.

நெதர்லாந்து வானொலிக்கு அளித்த பேட்டி ஒன்றி[illegible] வெளியிட்டார். [illegible] தாவது:-

★ இராணுவ நடவடிக்கையின் காரணமாக இடம் பெயர்ந்த 3 லட்சம் மக்களில் ஒரு லட்சம் மக்கள் நகரில் வாழ்வதால் அவர்களின் உணவு, சுகாதாரம் ஆகியன [illegible] பிரச்சினையாக உள்ளன.

★ இராணுவ நடவடிக்கை

(2 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த ஆலோசனைச் சபை தினமும் கூடி ஆராய்கிறது

குடாநாட்டில் தற்போது மேற்கொள்ளப்படும் ''லீப் போவேட்'' இராணுவ நடவடிக்கை தொடர்பான நிலைமைகளை கொழும்பில் யுத்த ஆலோசனைச் சபை தினமும் கூடி ஆராய்ந்து வருகிறது.

போர் முனை நிலைவரங்களை உடனுக்குடன் அறிந்து ஆலோசனைகளை வழங்குவதற்காக கடந்த வியாழக்கிழமை முதல் யுத்த ஆலோசனைச் சபை கூடி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரில் படையினருக்கு ஆலோசனைகளை வழங்க என ஜனாதிபதி இந்த யுத்த ஆலோசனைச் சபையை அண்மையில் அமைத்திருந்தார். [ஜ-6]

## புலிகளின் தாக்குதலுக்கு மத்தியில் படையினரின் வான் தாக்குதல் தொடர்கிறது

### விமானப்படை தளபதி கூறுகிறார்

கொழும்பு ஜூலை 14

தற்போதைய யுத்தத்தில் புலிகள் விமான எதிர்ப்பு ஆயுதங்களைப் பயன்படுத்திய போதிலும் படையினரின் ஆகாய நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

விமானப் படைத் தளபதி ஏயர்மார்ஷல் ஒலிவர் ரணசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எனினும் யுத்தம் ஆரம்பமான முதலாவது நாளான ஞாயிற்றுக்கிழமை ஹெலிக்கொப்டர் ஒன்று புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானது என்றும் —

அடுத்தநாள் திங்கட்கிழமை மற்றும் ஒரு ஹெலிக்கொப்டர் தாக்குதலுக்கு உள்ளாகி அதில் இருந்த விமானப்படை வீரர் ஒருவர் காயம் அடைந்தார் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## கைப்பற்றிய இடங்களை ராணுவம் விட்டுக் கொடாது

### அதிகாரி ஒருவர் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 13

தற்போதைய ராணுவ நடவடிக்கை பூர்த்தி அடைந்த பின்னர், கைப்பற்றிய இடங்களில் இருந்து ராணுவம் வெளியேற மாட்டாது. தொடர்ந்து அதே இடங்களிலேயே நிலை கொண்டிருக்கும்.

ராணுவ அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஞாயிறன்று புலிகளும் படையினரும் மிகவும் குறுகிய தூரத்தில் நின்று நடத்திய சண்டையின் போது 2 ராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும், 5 அதிகாரிகள் உட்பட 51 படையினர் காயம் அடைந்தனர் என்றும் சிரேஷ்ட ராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் சண்டை தொடர்ந்து நடைபெறுவதால் ராணுவத்தின் இழப்பீடுகள் குறித்து சரியான தகவல்களை வெளியிட முடியவில்லை என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## ஞாயிறு, திங்கள் காயமுற்ற இருவர் நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

கடந்த 9, 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பகுதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் இருவர் நேற்று மரணமடைந்தனர்.

தாவடியில் இடம்பெற்ற புக்காரா விமானத் தாக்குதலில் காயமடைந்த கஜினேகா (வயது 12) என்பவரும் சுழிபுரத்தில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் போது காயமடைந்த நிருனசிலன் ஆகிய இருவருமே உயிரிழந்தவர்கள் ஆவர். (உ-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

**புலமைப் பரிசில் பரீட்சை**

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி "பொது விவேகம்" 97/- வினாத்தாள் 1, IIற்குரியது. வெளியீடு: அன்ரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1717)

## 'மாஹோ' விலும் தபால்கள் வரமாட்டா

வடபகுதிக்கான தபால் பொதிகள் 'மாஹோ' கப்பலிலும் எடுத்து வரப்படமாட்டாது என்று கொழும்பிலிருந்து நேற்று முன்தினம் யாழ் வந்து சேர்ந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை ஏற்கனவே சோதனை முடிக்கப்பட்ட நிலையில் உள்ள தபால் பொதிகள் 'லங்கா முடிதா' கப்பலிலேயே எடுத்து வரப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. [எ-4]

---

ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட்டில் பணிபுரியும் சகல ஊழியருக்குமான

## அறிவித்தல்

ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட்டில் பணிபுரியும் சகல ஊழியர்களையும் இன்று 14-07-95 எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

— நிர்வாகம்.

[சி-1648]

---

## அறிவித்தல்

15 - 07 - 1995 இல் நடைபெற இருந்த எமது மகள்

✱ கார்த்திகாவின் ✱

பூப்புனித நீராட்டு விழா நாட்டு நிலைமை காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை அழைப்பு விடுக்கப்பட்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்:
திரு. திருமதி கா. மாணிக்கவாசகர்.

88/7, பருத்தித்துறை வீதி,
(குருநாதசுவாமி கோயிலடி)
யாழ்ப்பாணம். [37509]

---

## கண்ணீர் அஞ்சலி

செல்வி
**இரத்தினபூபதி சிவசுப்ரமணியம்**
(இலங்கை வங்கி யாழ். பிரதான கிளை முன்னைநாள் ஊழியர்)

11-7-95 காலை அகால மரணமடைந்த எம் முன்னைநாள் ஊழியர்
செல்வி இரத்தினபூபதி சிவசுப்ரமணியத்தின்
ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரதான முகாமையாளரும்,
ஊழியரும்.
இலங்கை வங்கி மேற்தரக்கிளை,
யாழ்ப்பாணம்.

(37519)

---

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் கல்விக்கோட்டத்தில் திட்டமிடல் உதவியாளராகக் கடமையாற்றிய
**வைத்திலிங்கம் ஜெயசிங்கம்**
அவர்கள்
10 - 07 - 95 நவாலியில் புக்காரா விமானத் தாக்குதலால் அகால மரணம் அடைந்ததையிட்டு கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் மனைவி, மக்கள், குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
அலுவலர், அதிபர்,
முதன்மையாசிரியர், ஆசிரியர்.

உடுவில். [37518]

---

கரவெட்டி
பிரதேச செயலகத்தின்

## கண்ணீர் அஞ்சலி

அகால மரணமடைந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்கள்
**செல்வி ஹேமலதா செல்வராசா**
**கபிரியேல்பிள்ளை**
ஆகியோருக்கும்
தெல்லிப்பளை பிரதேச செயலகத்தை சேர்ந்த கிராம அலுவலர்
**வே. வன்னியசிங்கம்**
அவர்களுக்கும்
எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் இவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலரும்,
அனைத்து உத்தியோகத்தர்களும்.

உத்தியோகத்தர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம்,
கரவெட்டி.
12-7-1995. (சி-1646)

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்
விசேட

## பொது நிர்வாக சபைக் கூட்டம்

இடம்: இருபாலை எக்ஸ்பிறஸ் கல்வி நிலையம்
காலம்: 15ஆம் திகதி சனி பி. ப. 3 மணி

சகல கோட்டங்களின் ஏழு [7] நிர்வாகசபை உறுப்பினரும் தவறாது கலந்து கொள்ளவும்.

பொதுச் செயலாளர்.
யாழ். மாவட்டம்.

(சி-1650)

---

## கலந்துரையாடல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

நல்லூர் பிரிவு அங்கத்தவர், தொண்டர்கள், இளைஞர் வட்ட அங்கத்தினர் அனைவரையும், இடம் பெயர்ந்த மக்களின் நலன்களைக் கவனிக்கும் விடயமாக 15 - 07 - 1995 பிற்பகல் 5-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடக்கும் ஒரு கலந்துரையாடலில் பங்குபற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அ. யே. குலசிங்கம்,
கௌரவ செயலாளர்,
நல்லூர் பிரிவு,

[37523]

---

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்
நல்லூர்
**கந்தசுவாமி கோவில்**
**1995 ஆம் ஆண்டு**
**மஹோற்சவ கால**
**தற்காலிக கடைகள்**

மேற்படி விடயமாக இதே பத்திரிகையில் ஏற்கனவே வெளிவந்த விளம்பரம் தொடர்பாக கேள்விப் படிவம் பெறுவதும் கேள்வி ஏற்பதுமான திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கேள்விப்படிவம் பெறும் இறுதித்திகதி
20-07-95 பி. ப. 3 00 மணி
கேள்வி ஏற்கப்படும் இறுதித் திகதி
21-07-95 ந. ப. 12. 00 மணி

வே. பொ. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம் 1995-07-13. [சி/1661]

---

## தகவல் தரவும்

அளவெட்டி தெற்கில் வசிப்பவர்களாகிய
திரு. க. சிவப்பிரகாசம்
திருமதி சிவப்பிரகாசம் அழகம்மா
ஆகியோரைத் தவறவிட்டு விட்டோம் இருக்கும் இடத்தை அறியத்தரவும்.

சுப்பிரமணியம் புத்தகசாலை அச்சகம்,
63, B. A. தம்பி லேன்,
யாழ்ப்பாணம். [37521]

---

## தகவல் தரவும்

சங்கானை பிளாக் வீதியில் வசிப்பவர்களாகிய
திரு. செம்பொற்சோதி தனபாலசிங்கம்
திருமதி. த. புவனேஸ்வரி
செல்வி. த. மிதிலா (தங்கம்)
ஆகியோர் எம்மைக் கீழ்க்காணும் விலாசத்தில் சந்திக்கலாம்.

தகவல்:
திருமதி தர்மபாலன் இராசஇராசேஸ்வரி
(பட்டு)
"கணேசன் கருணை",
தாவடி.

(சி/1649)

---

இடம் பெயர்ந்த
பனை, தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின்
**அங்கத்தவர் பணியாளருக்கான**

## முக்கிய அறிவித்தல்

எமது பிரதேசத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்த வலிகாமம் பிரதேச அங்கத்துவ சங்கங்களினதும் கொத்தணியினதும் பணியாளர் கோப்பாய் சங்கத்தில் சமுகமாக இருக்கும் தங்கள் பொதுமுகாமையாளர் ஊடாக கோப்பாய் ப. தெ. வ. அ. கூ. சங்கத்தின் பொது முகாமையாளரின் இணைப்புடன் கீழ்வரும் நடவடிக்கைகளுக்காகத் தொடர்பு கொள்ளவும்.

கிளை முகாமையாளர்கள் தம் வசமுள்ள விற்பனைப் பணத்தைச் செலுத்துவதுடன், உரிய சங்கப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளவும்.

மேலும், சகல பணியாளர்களும் தாம் இடம் பெயர்ந்த, இடங்களில் உள்ள அங்கத்தவர் தொடர்பான இடம்பெயர்ந்த இறந்த, காயமுற்ற, இராணுவக் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசத்தில் உள்ள அங்கத்தவர் பணியாளர்விவரங்களைத் திரட்டி ஒப்படைக்கவும்.

இடம் பெயர்ந்த அங்கத்தவர்கள் தங்கள் நிலைவரம் தொடர்பான தகவல்களை இப்போது தாங்கள் தங்கியுள்ள பிரதேசத்தில் உள்ள எமது அங்கத்துவ ப. தெ. வ. அ. கூ. சங்கங்களிலும் கொத்தணிகளிலும் ஒப்படைக்கவும்.

நன்றி

தலைவர்
வடமாகாண ப. தெ. வ. அ. கூ. ச. சமாசம்

(சி- 1647)

---

## மட்டக்களப்பில் தமிழ் வாலிபர் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூலை 14

மட்டக்களப்பு வாழைச்சேனையில் தமிழ் இளைஞர் ஒருவர் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கடந்த சனியன்று இச்சம்பவம் இடம் பெற்றது.

மீராவோடையைச் சேர்ந்த 22 வயதான ஒரு பிள்ளையின் தந்தையான இராமன் சின்னராசா என்பவரே சுட்டுக் கொலைப்பட்டவராவார். [ஐ-4]

## பனையால் விழுந்து மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

பனைமரத்தில் இருந்து தவறிவிழுந்து நேற்று ஒருவர் உயிரிழந்தார்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி ஆரியகுளம் பகுதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லர்முத்துக்குமாரன் [வயது 45] என்பவரே மரணமானவராவார். [ஐ-15]

## விவரங்களை பதிவு செய்ய கோரிக்கை

கொழும்புத்துறை, ஜூலை 14

இடம் பெயர்ந்து நெடுங்குளம் ஜே - 61 கிராம அலுவலர் பிரிவில் தங்கியுள்ள தொல்புரம், மூளாய், களிபுரம், சங்கானை, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, மானிப்பாய், அராலி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் கொழும்புத்துறை துறைமுகம் சந்தியிலுள்ள கிராம சேவை அலுவலர் காரியாலயத்தில் நேரில் வந்து தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு இப் பகுதிக் கிராம அலுவலர் திரு. எஸ். பாக்கியராசா அறிவித்துள்ளார். [ஐ-30]

---

**முதல்கட்ட...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளன.

ஆனால் இராணுவ தரப்பின் உண்மையான இழப்புக்கள் அதிகமாக இருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

நேற்றுக் காலை சங்கரத்தைப் பகுதியில் புலிகளுக்கும் அரசப் படைகளுக்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது.

மானிப்பாய் கட்டுடைப் பகுதியில் நேற்றுக் காலை 7 மணிக்கு 'புக்காரா' விமானம் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலில் பல வீடுகள் சேதமுற்றன.

தற்போதைய படை நடவடிக்கையின் போது இராணுவத்தினரின்-மனித நேயமற்ற —கண்மூடித்தனமான— ஷெல் தாக்குதல்களாலும், விமானக் குண்டு வீச்சாலும் 220க்கும் அதிகமான தமிழ் மக்கள் உயிரிழந்தனர். [உ-எ-2-4-15]

---

**படை நடவடிக்கை..**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யின் போது முதல் நாள் 300 பேரும், மறுநாள் 200 பேரும், மறுநாள் 100 பேருமாக மொத்தம் 600 பொது மக்கள் காயமடைந்துள்ளனர். ஆயிரம் படுக்கைகள் கொண்ட யாழ். ஆஸ்பத்திரியில் இவர்களுக்கு சிகிச்சை அளிப்பது பெரும் பிரச்சினையாகியுள்ளது.

★ யாழ். ஆஸ்பத்திரிக்கு சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் குழு ஒன்றை அனுப்ப எமது அமைப்பு திட்டம் வகுத்தது ஆனால் ஸ்ரீலங்கா அரசு அக்கறை காட்டவில்லை.

★ யாழ். அரச அதிபர் 4 வாரத்துக்கு போதுமான உணவே இருப்பதாக கூறியுள்ளார். இந்த உணவு இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்படுவதால் விரைவாக முடிவடைகிறது. 16 விநியோக நிலையங்கள் மூலமாக இந்த விநியோகம் நடக்கிறது.

இராணுவ நடவடிக்கை தொடர்ந்தால் உணவு, மருந்து தட்டுப்பாடு ஏற்படலாம்.

யாழ். குடாநாட்டில் 20 சதுரகிலோ மீற்றர் பரப்பளவில் இடம் பெயர்ந்த 3 லட்சம் மக்களை வைத்து பராமரிப்பதும் பெரும் பிரச்சினையாக உள்ளது.

★ ஸ்ரீலங்கா படையினர் அப்பகுதிகளில் உள்ள மக்களின் நலனையும் கவனத்தில் எடுக்க வேண்டும் — என்றார் [உ-3]

---

வண். கிழக்கு கலட்டி
எச்சாட்டி மகாமாரியம்மன்
ஆலய

## மகா கும்பாபிஷேகம்

மேற்படி ஆலய கும்பாபிஷேக கிரியைகள் 12-7-95 புதன் மாலை 7-00மணி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறுகின்றன. இன்று 14 - 7 - 1995 வெள்ளி காலை 8-30 மணி தொடக்கம் 15 - 7 - 95 சனி பி. ப 3-00 மணி வரை அடியார்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் வைபவமும் 16 - 7 - 95 காலை கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளன என்பதை அடியார்களுக்கு அறியத் தருகின்றோம்.

பரிபாலன சபையும்
கும்பாபிஷேகக் குழுவும்

(37533)

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்
இடம்பெயர்ந்தோருக்கான

## நிவாரணம்

27பி, 28ஏ, உலர் உணவு முத்திரைக்கான பொருள்களை இதுவரை பெற்றுக்கொள்ளாத பாவனையாளர்கள் பின்வரும் நிவாரணக் கிளைகளில் ஏதேனும் ஒன்றில் முத்திரைகளை ஒப்படைத்துப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கிளை. 1 — பண்ணை வீதி.
கிளை. 3 — மானிப்பாய் வீதி
கிளை. 6 — அரியாலை
கிளை. 7 — நாவற்குழி
கிளை. 8 — அரியாலை

"உ" அட்டைக்குரிய பாவனையாளர்கள் லக்ஸ்பிறே, சீனி, மாவு ஆகியவற்றை கிளைகளில் பெற்றுக் கொள்ளவும்.

பொது முகாமையாளர்

(சி/1662)

---

## கலந்துரையாடல்

தொழில்நுட்பக் கல்லூரியின் சகல நிரந்தரப் பணியாளர்களையும் 1995 - 07 - 15ஆம் திகதி மு.ப. 10-30 மணிக்கு கலந்துரையாடலுக்குத் தவறாது பிறவுண் வீதியில் உள்ள தொழில்நுட்பக் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

க. ஜெயரத்தினம்
அதிபர்

தொழில்நுட்பக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.
1995-7-13. (சி-1663)

---

இடம்பெயர்ந்த
சேரன் பல்பொருள் வாணிப
ஊழியர்களுக்கான

## அறிவித்தல்

சேரன் பல்பொருள் வாணிப நிறுவனத்தில் பணியாற்றும் ஊழியர்களில் இராணுவ ஆக்கிரமிப்பினால் இடம்பெயர்ந்துள்ள ஊழியர்கள் அனைவரும் தற்போது தங்கி இருக்கும் முகவரியினையும் தங்கள் நிலையினையும் சேரன் பணிமனையில் (கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்) பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் எமது நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பத்தினர் இடம்பெயர்ந்திருந்தால் இவர்கள் பற்றி அறியஆவலாக உள்ளவர்களும்மேற்படி எமது ஊழியர்களை தொடர்புகொள்ள விரும்புவோரும் பணிமனையில் விவரத்தை பதிவு செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

சேரன் நிர்வாகம்

(சி-1665)

---

## அவசர அறிவித்தல்

மகளிர் அபிவிருத்தி நிலைய அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரையும் இன்று 14 - 07 - 95 காலை 10-00 மணிக்கு எமது நிலையத்தில் கூடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்.

07, சயந்த சிறி ஒழுங்கை,
கே. கே. எஸ். வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [37524]

---

## கண்ணீர் அஞ்சலிகள்

09-07-1995 ஆம் திகதி நவாலி சென். பீற்றர்ஸ் புனித தேவாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சினால் அகால மரணமடைந்த சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்களான
**கபிரியேற்பிள்ளை,**
**செல்வி. ஹேமலதா**
ஆகியோருக்கும், மற்றும் மூளாயில் அகால மரணமடைந்த தெல்லிப்பளை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம அலுவலர்
**வே. வன்னியசிங்கம்**
அவர்களுக்கும்
எங்கள் மனம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அவர்களது குடும்பத்தினருக்கும் எங்கள் இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்
நலன்புரிசங்கம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. [சி/1664]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## அழுத்தம் கொடுங்கள்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தாம் நடத்திவரும் "லீப் போவேர்ட்" (முன்னேறிப் பாய்தல்) இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடத்தப்படும் என்று அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டம் வெற்றிகரமாக நிறைவெய்திவிட்டதாகவும் நேற்று தண்பகல் இராணுவ அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார்.

இரண்டாவது கட்டம் எத்திசை நோக்கியது; எவ்வாறு அமையும் என்பது குறித்த இரகசியம் வெளியிடப்படவில்லை.

இராணுவத்தின் 'முன்னேறிப் பாய்தல்' நடவடிக்கையின் பிரதான நோக்கம் பலாலி இராணுவத் தளத்தைச் சுற்றி அரைவட்ட வடிவிலான பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைப்பதே என்றும் —

அந்த அரைவட்டத்தின் முன் அரண் பாதுகாப்பு நிலைகளாக, தொண்டமனாறு, அச்சுவேலி, வசாவிளான், குரும்பசிட்டி, தெல்லிப்பழை, அளவெட்டி, உடுவில், கந்தரோடை, சங்கானை, அராலித்துறை, மூளாய், பொன்னாலை, காரைநகர் ஆகிய பகுதிகள் அமையும் என்றும்— உத்தியோகப் பற்றற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் முதலாவது கட்டத்தின் இராணுவ ரீதியான நோக்கம் எதுவாக இருந்தாலும் சரி, அது அப்பாவி தமிழ்ப் பொது மக்களைத் தாக்கி அழிப்பதையும், அவர்களின் உடைமைகளை நாசமாக்கி தமிழர் பிரதேசங்களை மயான பூமியாக்குவதிலுமே முடிந்துள்ளது என்பதே உண்மை.

தாம் புலிகளை விட மிகவும் பலமானவர்கள் என்று காட்டுவது இராணுவத்தின் நோக்கம். அதன் பொருட்டு "முன்னேறிப் பாய்தலை" அது வெகு உக்கிரமாக நடத்தி வேகமான, மூர்க்கத்தனமான, இடைவெளி இல்லாத, தொடர்ச்சியான எறிகணை வீச்சுகள், குண்டுவீச்சுகள் மூலம் மனிதக்கொடூரங்களை நிகழ்த்தியுள்ளது.

கடந்த ஐந்து நாள் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளில் ஆகக்கூடியது பத்துப் பேரே உயிரிழந்துள்ளனர். ஆனால் எறிகணை வீச்சுக்கும், குண்டு வீச்சுக்கும் இரையான பொதுமக்களின் எண்ணிக்கை முந்நூறுக்கும் குறையாததாகும்.

விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக என்று சந்திரிகா அரசாங்கத்துக்கு இராணுவ உதவி வழங்கிய வெளிநாடுகள் இந்த விடயத்தைச் சற்று நோக்க வேண்டும். தாம் செய்த உதவியால் மடிந்த தமிழ்ப்பொது மக்களின் எண்ணிக்கையையும், விடுதலைப் புலிகளின் எண்ணிக்கையையும் பெற்று கணக்குச்செய்து பார்க்கட்டும்.

ஸ்ரீலங்கா அரசாங்கம், தனது இராணுவத்தின் மூலமாக, விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவது என்ற போர்வையில், தமிழர்களை இன அழிப்புச் செய்கிறது என்பதனை நன்றாகப் புரிந்து கொள்ள முடியும்.

முன்னேறிப் பாய்தலின் இரண்டாவது கட்டம் வலி. மேற்கு, வலி. வடக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த நான்கு லட்சம் மக்கள் தங்கியுள்ள பகுதிகள் மீதாக இருக்குமாயின் —

முதலாவது கட்டத்தைப் போலவே உக்கிரமானதாக இருக்குமாயின், ஒரு நாளில் மட்டும் ஆயிரம் ஆயிரம் அப்பாவிப் பொதுமக்கள் மடியலாம்.

வட-கிழக்கில் ராணுவ தாக்குதல் விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்தவும் அல்ல; அரசியல் தீர்வை முன்வைப்பதற்கும் அல்ல; தமிழர்களை இனப்படுகொலை செய்வதற்கு என்பதே யதார்த்தம்.

இதனை உணர்ந்தாவது குடாநாட்டின் மீதான இராணுவ நடவடிக்கைகளை — தமிழ் மக்களை இனஅழிப்புச் செய்வதை — உடனடியாக நிறுத்துமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு வெளிநாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

# கொழும்பில் தாக்குதல் நடக்கலாம் என அச்சம்

கொழும்பு, ஜூலை 14

வடபகுதியில் இராணுவம் தொடங்கியுள்ள பெரும் எடுப்பிலான இராணுவ நடவடிக்கையை அடுத்து தெற்கில் எந்நேரமும் குண்டுவெடிப்புகள் நிகழலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால் தலைநகர் கொழும்பு உட்பட கேந்திர முக்கியத்துவம்வாய்ந்த இடங்களில் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப் பட்டுள்ளனர்.

தெற்கில் பரவலாக பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

படையினரின் சோதனை நடவடிக்கைகளும் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

தமிழர் குடியிருப்புகள் திடீர் திடீரென சுற்றிவளைக்கப்பட்டு தமிழர்கள் கைது செய்யப்படுகின்றனர்.

நேற்று முன்தினமும் கொழும்பில் பல தமிழர்கள் படையினரால் கைது செய்யப் பட்டனர்.

இதேவேளை கண்டி தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தப்படலாம் என்று அஞ்சி, அங்கு பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே அங்கு பொருத்தப்பட்டுள்ள பாதுகாப்பு சாதனங்களில் செயல்படாமல் உள்ள சாதனங்களை அகற்றி விட்டுப் புதிதாக நவீனரக பாதுகாப்பு சாதனங்களை பொருத்துமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இதற்கென 20 இலட்சம் ரூபாவையும் அவர் ஒதுக்கி உள்ளார். (எ)

# வடக்கேயிருந்து சென்ற 2 தமிழர் வவுனியாவில் மர்மமாகக் கடத்தல்

### வெள்ளைவானில் கொண்டு செல்லப்பட்டனர்

வவுனியாவில் தமிழர்கள் மர்மமான முறையில் கடத்தப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சனிக்கிழமை வடபகுதியில் இருந்து தாண்டிக்குளம் ஊடாகச் சென்ற தமிழ் இளைஞர்கள் இருவர், வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டனர்.

கடத்திச் செல்லப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவரவில்லை.

அதே சமயம் தாண்டிக்குளம் ராணுவ சோதனை முகாமில் படையினரின் அட்டகாசங்கள் அதிகரித்துள்ளன.

ராணுவத்தினர் சோதனை என்ற பெயரில் இளவயதினரை தடுத்து வைப்பதுடன் அவர்களை அடித்து சித்திரவதை செய்கின்றனர்.

கடந்த வாரம் வடபகுதியில் இருந்து சென்ற இளைஞர்கள் தலையாட்டி முன் நிறுத்தப்பட்டு அவர்களில் 20 பேர் ராணுவத்தால் கைது செய்யப்பட்டமை தெரிந்ததே.

இந்த 20 பேரின் நிலை பற்றிய விவரங்கள் எதுவும் இன்னமும் தெரியவில்லை. (இ-எ)

### முகாம்களில் உள்ளோருக்கு

# ஒன்றிணைந்த முறையில் சுகாதார வசதிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு தேவையான சுகாதார வசதிகளை ஒன்றிணைந்து வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டில் இயங்கும் 69 முகாம்களுக்கு சுகாதார வசதிகள் செய்வது தொடர்பாக நேற்று முன்தினம் நடந்த கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு சீரான முறையில் முகாம்களுக்கு மருந்து வகைகளை விநியோகிக்கவும் —

தேவையற்ற வகையில் மருந்துகள் விநியோகிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தவும் — மருத்துவ, சுகாதார வசதிகளை ஒன்றிணைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

# இடம்பெயர்ந்தோர் மீது படையினர் ஷெல் வீச்சு

### இளைஞர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை. 14

அகதிகளாக வெளியேறிக் கொண்டிருந்தவர்களை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினால் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

அராலி, கல்லுண்டாய்ப் பகுதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றது.

வட்டுக்கோட்டை அராலி கொட்டைக்காடு பகுதிகளை நோக்கி நேற்றுக்காலை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலை அடுத்து அப்பகுதி மக்கள் அகதிகளாக வெளியேறினர்.

அவர்கள் கல்லுண்டாய் வெளியில் வந்துகொண்டிருந்த போது காலை 9.30 மணியளவில் ஏவப்பட்ட ஷெல் ஒன்று அவர்களுக்கு அருகில் விழுந்து வெடித்தது.

இச்சம்பவத்தில் அராலி கொட்டைக்காட்டைச் சேர்ந்த நடராசா ரவிச்சந்திரன் (வயது 25) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (எ-15)

### கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து

# எம். எஸ். எவ். அமைப்பின் டாக்டர் குழு வாபஸ்

### படையினர் ஷெல் வீச்சை அடுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 14

கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பணியாற்றிய பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த எம்.எஸ்.எவ். அமைப்பின் வைத்தியர்கள் தமது பணிகளை கைவிட்டு கொழும்பு திரும்பியுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதி நோக்கி கடந்த வாரம் படையினர் ஷெல் தாக்குதல் நடத்திய சம்பவத்தையடுத்து இவர்கள் அங்கிருந்து வெளியேறியதாக தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் யாழ். ஆஸ்பத்திரியில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயம் போன்று —

கிளிநொச்சியில் ஆஸ்பத்திரியை சுற்றி — எம்.எஸ்.எவ். அமைப்பின் மேற்பார்வையில் பாதுகாப்பு வலயம்— உருவாக்க முயற்சி எடுக்கப் பட்டிருந்தது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சின் அசமந்தப் போக்கால் அது சாத்தியப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

# தனியார் ஹெலிகளுக்கு இரத்மலானையில் தடை

இரத்மலானை விமானத் தளத்தின் பாதுகாப்புக் கருதி தனியார் ஹெலிக்கொப்டர்களை அங்கு தரை இறங்க அனுமதிப்பதில்லை என அரசு முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

தனியார் துறையின் ஹெலிக்கொப்டர்களை தரையிறக்குவதற்கான பிறிதொரு தளம் (Helipad) ஒன்றை அமைக்கும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொழும்பு இராண்ட்பாஸில் இத்தளம் அமைக்கப்பட்டு வருகிறது.

தற்போது தனியாருக்குச் சொந்தமான ஹெலிகளும் இரத்மலானையிலேயே இறங்குகின்றன.

இதனால் அங்கு பாதுகாப்பு நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன.

அங்குள்ள பாதுகாப்பு படையினர் மத்தியிலும், உயர் அதிகாரிகள் மத்தியிலும் குண்டு வெடிப்புகள் பற்றிய அச்சமும் எழுந்துள்ளது.

இதனை அடுத்தே தனியார் ஹெலிகளை இரத்மலானையில் தரையிறங்க அனுமதிப்பதில்லை எனவும்—

தனியாருக்கென வேறான ஒரு இறங்கு தளம் அமைத்துக் கொடுப்பது எனவும் — முடிவு செய்யப்பட்டது.

## இன்று நடக்கும் அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் ஜூலை 14

யாழ். மாவட்டத்தில் உள்ள ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் திரு. சு. டொமினிக். கூட்டுறவுப் பொறுப்பாளர் திரு. பரணி ஆகியோர் இதில் கலந்து கொள்வர். (ஐ)

★ ★ ★

சங்கானை பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த சகல அலுவலர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தற்போதைய சூழ்நிலையில் எடுக்கவேண்டிய அவசிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டியுள்ளதால் சகலரையும் தவறாது சமுகம் தருமாறு சங்கானை பி. தேச செயலர் கேட்டுள்ளார். (ஐ-4)

★ ★ ★

உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களையும் கிராம அலுவலர்களையும் வெளிக்கள உத்தியோகத்தர்களையும் இன்று காலை 9 மணிக்கு மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய பயிற்சி நிலையத்தில் கூடுமாறு உடுவில் பிரதேச செயலர் கோரியுள்ளார். (ஐ-4)

★ ★ ★

சகல வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று வெள்ளி பிற்பகல் 2 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகலரையும் கலந்து கொள்ளுமாறு கோரப் பட்டுள்ளது. (ஐ)

## பெயர்களை பதிவு செய்க

தென்மராட்சி, ஜூலை 14

யாழ்ப்பாணம், வலி மேற்கு வலி வடக்குப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து பளைப் பிரதேச செயலக பிரிவில் தங்கியுள்ள மக்கள் தமது பெயர்களை அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களிடம் பதிவு செய்து [illegible] தேச செயலர் [illegible] (எ-117)

# புறக்கோட்டையில் பொலீஸாரை சுட்டவர் சுன்னாகம் வாசியாம்

கொழும்பு, ஜூலை. 14

கொழும்பு புறக்கோட்டை மீன் சந்தைப் பகுதியில் இரு பொலீஸார் சுடப்பட்ட சம்பவம் தொடர்பாக சுன்னாகத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் தேடப்படுகிறார் என்று பொலிஸ் வட்டாரங்களை ஆதாரம் காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

சந்தேக நபரான சுன்னாகம் வாசி விடுதலைப்புலிகள் இயக்கத்தைச்சேர்ந்தவர்என்றும்— சில தினங்களுக்கு முன் கொழும்பு வந்து கொட்டாஞ்சேனையில் உள்ள லொட்ஜ் ஒன்றில் தங்கியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவதினம்புறக்கோட்டை மீன் சந்தையில் உள்ள குறிப்பிட்ட பொலீஸ் காவல் நிலையத்துக்கு இருதமிழ் இளைஞர்கள் வந்து பொலீஸார் ஒருவரின் பெயரைக் கேட்டதாகவும் —

அப்போது காவல் நிலையத்தில் கடமையிலிருந்த பொலீஸாருக்குச் சந்தேகம் ஏற்படவே அவர்கள் அந்த இரு தமிழ் இளைஞர்களினதும் அடையாள அட்டைகளை வாங்கி பரிசோதிக்க முற்பட்டதாகவும் —

அப்போது அங்கு திடீரென காணப்பட்ட மூன்றாவது நபர் ஒருவர் இடையில் மறைத்துவைத்திருந்த தானே இயங்கும் கைத்துப்பாக்கி ஒன்றை எடுத்து பொலீஸாரைச் சுட்டதாகவும் — கூறப்படுகிறது.

சுட்ட நபர் தப்பிச்சென்று விட்டார். மற்றைய இருவரும் அங்கு நின்றவர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் வேலை செய்யும் கொட்டாஞ்சேனையில்உள்ள லொட்ஜிலேயே அந்த நபரும் தங்கியிருந்தார் என்று விசாரணையின்போது தெரியவந்ததாம். (இ)

# அச்சுவேலிப்பகுதி மக்கள் வதந்தியால் இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 14

இராணுவம்வருவதாக பரப்பப்பட்ட வதந்தியால், அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் கிழக்கு ஆகிய பகுதிகளில் இருந்து பெரும் தொகையான மக்கள் இடம்பெயர்ந்தனர்.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றது.

அச்சுவேலியில் இராணுவம் வருவதாக முதலில் வதந்தி பரவியது.

இதனை அடுத்து அங்கிருந்த மக்கள் கைக்கு அகப்பட்டதை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினர்.

அச்சுவேலி மக்கள் இடம்பெயர்வதைக்கண்ட புத்தூர், ஆவரங்கால் வாசிகளும் தமது பிரதேசங்களைவிட்டு தென்மராட்சியை நோக்கி இடம் பெயர்ந்தனர்.

இரவோடிரவாக தென்மராட்சியை அடைந்த மக்களுக்கு, தமது பிரதேசங்களுக்கு இராணுவம் வரவில்லை என்பதும் — இது விஷமிகளால் பரப்பப்பட்ட வதந்தி என்பதும் மறுநாள் தான் தெரியவந்தது.

# தேடப்படுவோர் பட்டியல்

★ உதயன் நிறுவனத்தைச் சேர்ந்த திருமதி ஈஸ்வரி பெருமாள் தனது சகோதரன் இராஜலிங்கம் குடும்பத்தினரை. எஸ், நகுலேஸ்வரன் அம்பட்டன் பாலத்தடி கொக்குவில் கிழக்கில் தொடர்பு கொள்ளும்படி அறிவிக்கின்றார்.

★ மூளாய் கிழக்கைச் சேர்ந்த க. கௌரி தனக்குடும்பத்தைச் சேர்ந்த யோகநாதன் கமலாதேவி. யோ, சுசிந்தன், க. ஜெகநாதன். ஜெ. அன்னலஷ்மி ஆகியோரை 359/15, நல்லலஷ்மி அவென்யூ, நல்லூர் வடக்கு எனும் முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கின்றார்.

★ அரசடி வீதி வடலியடைப்பைச் சேர்ந்த சபாபதி பாக்கியநாதன் தனது மைத்துனி பேரின்பநாயகம் உஷாவை, 18, A கைலாய பிள்ளையார் கோயில் வீதி, நல்லூருக்கு வருமாறு கோருகின்றார்.

★ செல்வி கமலாதேவி கனகசபை, தொல்புரம் சுழிபுரத்தைச் சேர்ந்தவர் தமையன் திரு.க. தவகுரைத்தினம் குடும்பத்தை, கைதடி,நவீல்ட் பாடசாலையில் தொடர்பு கொள்ளுமறு கேட்கின்றார்.

★ ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் இலங்கை வங்கி பிரதான கிளை ஊழியர், திரு. நி. சாமிநாதர், தனது சக ஊழியர் சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி பூமணி இராஜவரோதயத்தைத் தேடுகின்றார்.

★ வட்டுக்கோட்டை கனகரட்ணம் வீதியைச் சேர்ந்த க. தர்மராணி, தனது அயல் வீட்டுக்காரர் கருணானந்தனை நல்லூர் ஆலயத்தில் வந்து தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கின்றார்.

★ சண்டிலிப்பாய், ஆலங்குலாயைச் சேர்ந்த திருமதி சோமசுந்தரம் தனது பெறாமகன் க. சுந்தரராஜாவை திருமதி சோமசுந்தரம், மே/பா Dr. செ. இந்திரராசா, உரும்பிராயில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கின்றார்.

★ மூளாய் வீதி, மூளாயிலிருந்து இடம்பெயர்ந்து, அம்பிகை மரக்காலை, 121, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் விநாசித்தம்பி வைத்திலிங்கம், தொல்புரத்தைச் சேர்ந்த தனது சகோதரன் விநாசித்தம்பி தியாகராசா குடும்பத்தினரைத் தேடுகிறார்.

★ சங்கானை, தொட்டிலடியிலிருந்து இடம்பெயர்ந்து ஞானவைரவர் கோயில் வீதி, சிறுப்பிட்டி மேற்கில் வசிக்கும் க. திருநாவுக்கரசு தனது சகோதரன் க. நகுலேஸ்வரனைத் தேடுகிறார்.

★ 189, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிவரட்ணம் ஜெகராஜா, அளவெட்டி தெற்கில் வசித்த தனது தாயார் திருமதி சிவரட்ணத்தையும், சகோதரியையும் தேடுகிறார்.

★ தெல்லிப்பளை கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து இணுவில் ஆஸ்பத்திரியில் தங்கியுள்ள சீனிவாசகம் இராசநாயகம், மூளாயிலும், வட்டுக்கோட்டையிலும் வசித்து வந்த தனது சகோதரிகளையும், தமையன் மற்றும் மைத்துனர்களையும் தேடுகிறார்.

★ 21, இராச வீதி, நல்லூரைச் சேர்ந்த திரு பொன்னம்பலம் நவரட்ணம். பண்டத்தரிப்பு இத்துக்கல்லூரியில் வசித்த தனது பெற்றார் திரு. திருமதி செல்லப்புவைத் தேடுகிறார்.

★ பண்ணாகம் சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னையா ஞானசந்திரமூர்த்தி அதே இடத்தைச் சேர்ந்த தனது சகோதரியையும், தனது இரு மகன்மாரையும் டாக்டர் நவரட்ணம், நாச்சிமார் கோவிலடி எனும் விலாசத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கின்றார்.

★ விசுவத்தனை வீதி, வடலியடைப்பைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை செல்வநாயகம், தனது மனைவி செ. செல்வறஞ்சிதாவையும், மகன் ஜசிந்தனையும் 32 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கின்றார்.

★ 143/1 ஆத்தியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. வரதராஜா (வைரம்) சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்ததனது சிறிய தாயார் திருமதி மீனாட்சியைத் தேடுகின்றார்.

★ யாழ். பல்கலைக் கழகத்தில் தங்கியுள்ள சிவானந்தம் நித்தியா, சிவானந்தம் வித்தியா ஆகியோர் அராலி மத்தி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தங்கராசா கௌரீஸ்வரி, சந்திரன் சிவானந்தன், பிரபு சிவானந்தம் ஆகியோரைத் தேடுகின்றனர்.

★ சங்கானை தொட்டிலடியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் தமது மனைவி சிவக்கொழுந்துவை இலக்கம் 50 யமுனா வீதி, நல்லூரில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறார்.

★ சண்டிலிப்பாய் ஆனைக்குளாயைச் சேர்ந்த இராமலிங்கம் கண்ணம்மா தமது கணவர் கனகசபை இராமலிங்கத்தை, மு. ஜெயசிங்கம், "அருணோதயம்" மட்டுவில் தெற்கில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறார்.

★ காரச் வீதி சண்டிலிப்பாயைச் சேர்ந்த வயிரவன் கதிரவேலு தமது தாயார் வயிரவன் லட்சுமியை சண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியர் விடுதியில் இருந்தவாறு தேடுகிறார்.

★ மல்லாகம் றோட் சங்கானையைச் சேர்ந்த பூதன் தியானந்தன் தனது தந்தையார் முருகன் பூதனை யாழ். மாநகரசபை இந்து விடுதியில் சந்திக்குமாறு வேண்டுகிறார்.

★ மூளாய் தெற்கு தம்பையா தவராஜா தமது தாயாரான தவமலர், சிவபாக்கியம் குடும்பத்தினரை 51/1,சங்கிலியன் வீதி, நல்லூரில் உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறார்.

★ மூளாய் வீதி வட்டுக்கோட்டையைச் சேர்ந்த க. செல்வராசா தமது குடும்ப நண்பர் மானிப்பாய் ந. விவேகானந்தனை இல 36, கஸட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறார்.

★ மூளாய் கிழக்கைச் சேர்ந்த செ. சுதர்ஸன் தனது சகோதரர் சிவதாஸன் சிவரூபனை இல. 36 கஸட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கிறார்.

★ சண்டிலிப்பாய் 7 ஆம் கட்டையைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை செல்வராசா தமது மாமனாரான கணபதி தவசியை சி. தம்பித்துரை, இளையதம்பி வீதி, சாவியப்பிட்டி அரியாலையில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கிறார்.

★ காளுவன் சந்தி சுழிபுரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் கந்தசாமி தமதுமாமனாரான சிதம்பரப்பிள்ளை பாலகிருஷ்ணன் குடும்பத்தினரை இல 3, வைமன் வீதியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறார். (ஐ-எ)

## மாணவர்கள் ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை, உடுவில், கோப்பாய், பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த சகல பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 9 மணிக்கு தத்தமது பாடசாலைகளுக்குச் சென்று அதிபர்களைச் சந்திக்குமாறு பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர். (ஐ)

★ ★ ★

காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி, சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், பாலாவோடை இ. த. க. பாடசாலை ஆகியவற்றின் அதிபர்கள். ஆசிரியர்களை இன்று வெள்ளி முற்பகல் 10 மணிக்கு யாழ் சென். ஜோன்ஸ் அக்கடமியில் கூடுமாறு கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ)

★ ★ ★

புங்குடுதீவு சித்தி விநாயகர் மகாவித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆண்டு 6 முதல் 11 வரை கல்வி பயிலும் மாணவர்களை இன்று காலை 8 மணிக்கு ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர்கள் அறிவித்துள்ளனர். (எ)

## உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

புங்குடுதீவு. நயினாதீவு ப.நோ. கூ. சங்கத்தின் நிவாரணக் கிளைகளில் வைகாசி கடைசி இருவாரத்துக்கும், ஆனி முதல் இரு வாரத்துக்கும் உரிய உலர் உணவுப் பொருள்கள் தற்சமயம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

சகல பாவனையாளர்களும் தமக்குரிய பொருள்களை எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்து சமய அமைப்புகளுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 14

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குச் சேவை புரியும் பொது நிறுவனங்களுடன் இணைந்து தொண்டாற்றும் படி, யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை, இந்து இளைஞர் மன்றங்களுக்கும் இந்து சமய நிறுவனங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது. (எ)

மக்கள்----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுக்கு விடுத்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் மீது ஸ்ரீலங்கா விமானப்படை மேற்கொண்ட தாக்குதல் தொடர்பாக ஆராய்வதற்காக கொழும்பில் கூடிய ஆயர் பேரவை அரசின் தாக்குதலைக் கண்டித்துள்ளது.

இத்தச் சம்பவத்தையிட்டு தமது கவலையையும் ஆயர் பேரவை வெளியிட்டுள்ளது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவகாமி கந்தையா

(இளைப்பாறிய அதிபர் - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம் — காரைநகர்)

காரைநகர் களபூமியைப் பிறப்பிடமாகவும், தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி சிவகாமி கந்தையா நேற்றுக்காலை (13 - 7 - 95) சிவபதமடைந்துவிட்டார்.

இவர் காசிநாதர் கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர் — சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு, திருமதி சின்னக்குட்டியின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு, திருமதி காசிநாதரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 55, அரசடி வீதி, V. M. P இல்லத்தில் நேற்று பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கா. கந்தையா
(கணவர்)

(37532)

### கணேசவேல் தேவகணேசன்

உயரப்புலம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கணேசவேல் தேவகணேசன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன்) 10-7-95 திங்கட்கிழமை காலை கொக்குவில் மேற்கில் அகாலமரணமானார்.

இவர் கணேசவேல் [உபதபால் அதிபர் கந்தரோடை] சரோஜினி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வனும், உருத்திரகணேசன், ஜெயகணேசன், [யாழ். மத்தியகல்லூரி] ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் 10-7-95 திங்கட்கிழமை பிற்பகல் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. சி. கணேசவேல்
[தகப்பன்]

உயரப்புலம்
ஆனைக்கோட்டை.
[37512]

### செல்வி ஜெயதா நவரத்தினம்

கந்தரோடை சுன்னாகத்தைச் சேர்ந்த செல்வி ஜெயதா நவரத்தினம் [யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட இறுதி ஆண்டு மாணவி] 10 - 07 - 1995 காலை கொக்குவில் மேற்கில் அகாலமரணமானார்.

இவர் நவரத்தினம் [இளைப்பாறிய குடியேற்ற அதிகாரி], மனோரஞ்சிதம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், மகேசரத்தினம் (Norway) செல்வி சித்திரா (Asst Lecturer Jaffna Campus) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 10 - 07 - 1995 திங்கட்கிழமை பிற்பகல் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றன. தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. நவரத்தினம்
(தகப்பன்)

உப தபாற் கந்தோரடி,
கந்தரோடை,
சுன்னாகம்.
(37511)

### திருமதி இராசமணி குமார்

இல. 07, அத்தியடி, புதுவீதியைச் சேர்ந்த இராசமணி குமார் அவர்கள் 13- 07- 95 அன்று இறைபதம் எய்தி விட்டார்.

இவர் காலஞ்சென்ற குமாரின் அன்பு மனைவியும், பத்மாவதி, ஜெயலக்சுமி, தவமலர். தயாபரநாதன் (சுவீடன்), அன்னசோதி (வவுனியா), சற்குணவதி, திலகவதி, சந்திரகாந்தி, சத்தியபவானி ஆகியோரின் அருமைத் தாயாரும் சண்முகநாதன், வைகுந்தாம்பிள்ளை, சுரேன் மரியநாயகம், யோகினி (சுவீடன்) ஜெயக்குமார் (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், முகுந்தன், காலஞ்சென்ற குகானந்தன், ஜசிந்தன், சயந்தன், துஷ்யந்தன், தாட்சாயினி, பிராங்லின், கணேசநாதன் (சுவீடன்), பிரதாயினி (சுவீடன்) ஜெயகணேஷ் (வவுனியா), சரவணன் (வவுனியா) ஆகியோரின் அருமைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை [14-7- 95) அன்று] 8. 0o மணி அளவில் தகனக்கிரியைகளுக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
பிள்ளைகள்

07, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.
[37525]

### திருமதி இரத்தினம் பொன்னுத்துரை

வேலணை மேற்கைச் சேர்ந்த திருமதி இரத்தினம் பொன்னுத்துரை 12-7-95ல் காலமாகி விட்டார்.

இவர் தம்பிப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், சுவாமிநாதன், சரோஜினிதேவி (தேவி), திருமுறைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயாரும், உலகநாயகி. நவரத்தினம் [லதாஸ்ரோர்ஸ் காவி], சண்முகராசா [பெற்றா ஏஜன்சு காவி] ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற இராசம்மா, மற்றும் தங்கம்மா, காலஞ்சென்ற லக்ஷ்மி, மற்றும், அமுதவல்லி, சுந்தரவல்லி ஆகியோரின் சகோதரியும், சபாரத்தினம், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, மற்றும் சிவசுப்பிரமணியம், தம்பிஐயா, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [14-7-95] முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, கோண்டாவில் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்.
பிள்ளைகள், மருமக்கள்

கோண்டாவில் கிழக்கு.
[37530]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

# தற்போதைய படை நடவடிக்கை

# பொதுமக்களுக்கு பெரும் பாதிப்பு

## நிலையை விளக்கி தூதரகங்களுக்கு அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கையின் உண்மையான விளைவுகளை, பாதிப்புக்களை எடுத்துக் கூறும் விவரமான மகஜர் ஒன்றை—

யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

மொத்தம் 26 நாடுகளின் தூதுவர்களுக்கு இந்த மகஜரின் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பாதுகாப்புப் படைகள் நடத்தும் இராணுவ நடவடிக்கையால் பொதுமக்களுக்கே சகல மட்டங்களிலும் சொல்லொணாக் கஷ்டங்களும் பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

இந்த வேதனைகளுக்கு மத்தியில் படையினர் பல திசைகளிலும் கண்மூடித்தனமாக நடத்தும் ஷெல் வீச்சினாலும் விமானக் குண்டு வீச்சினாலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் பலர் காயமுற்று அங்கவீனமுற்றுள்ளனர்—.

யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் சடலங்கள் நிரம்பி வழிகின்றன; வார்டுகள் காயமுற்றவர்களால் நிரம்பி வழிகின்றன அவர்கள் வார்ட்டுகளின் நடைபாதைகளில் கூட தங்க வைக்கப்பட்டுள்ளனர் — ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டு வரப்பட்டவர்களை விட இராணுவத்தாக்குதலால் கொலையுண்டவர்களில் பல்லர அவரது உறவினர்கள் அந்தந்த இடங்களிலேயே தகனம் செய்துள்ளனர். நான்கு நாட்களில் இறந்தவர்கள் எண்ணிக்கை 300 க்கும் அதிகமாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது—

வானத் தாக்குதலினால் சேதமுற்ற சகல இலக்குளும் பொது மக்களின் குடிமனைகளும், வணக்க ஸ்தலங்களுமாகும்—

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மருத்துவ சேவையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது; மருந்து வகைகளுக்குப் பெருந் தட்டுப்பாடு நிலவுகிறது. அதனால் இராணுவ நடவடிக்கையினால் காயமுற்றவர்களின் உயிர்களைக் காப்பாற்ற முடியாத அவலமும் உண்டு—

ஷெல் வீச்சும், விமானக் குண்டு வீச்சும் உண்டாக்கிய பீதியினால் மூன்று லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு தூர இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர். அதனால் அவர்களுக்கென தற்காலிக அகதி முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. யாழ்ப்பாண பல்கலைக்கழகமும் மிகப் பெரிய அகதிமுகாம்களில் ஒன்றாக மாறியுள்ளது.

இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை மிகக் கூடுதலாக இருப்பதாலும், உணவு, மருந்து மற்றும் வசதிகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாலும் அகதிகள் பிரச்சினை பெரும் பிரச்சினையாகியுள்ளது. —

விடுதலைப் புலிகளிடம் இருந்து விடுவிப்பது என்ற பெயரில் இன அழிப்பு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இதனை நிறுத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசு மீது நீங்கள் அழுத்தம் கொடுப்பீர்கள் என நம்புகின்றோம் —என்று அந்த நீண்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஆ)

## அமைச்சர் நிமால் நேற்று வடபகுதிக்கு விஜயம்

கொழும்பு, ஜூலை. 14

வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் நிமால் சிறிபாலா டி சில்வா நேற்று வடபகுதிக்கு விஜயம் செய்தார்.

பலாலியிலும், காங்கேசன் துறையிலும் படை அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார்.

இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறும் பகுதிகளையும் அமைச்சர் பார்வையிடுவதை ரூபவாஹினி நேற்றிரவு ஒளிபரப்பியது. (ஐ)

## வாழைச் சேனையில் நிலக் கண்ணிவெடிப்பு!

கொழும்பு, ஜூலை. 14

வாழைச்சேனையில் தொலுமடுவ பொலிஸ் நிலைய காவல் நிலையத்துக்கு அருகில் நேற்று பிற்பகல் 3. 15 மணியளவில் நிலக்கண்ணி ஒன்று வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்தக் கண்ணி வெடியில் "ஹைஏஸ்" வான் ஒன்று முற்றாகச் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. [ஐ-3]

## படையினர் வேட்டுக்கு கட்டுடையில் ஒருவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமது வீட்டில் இருந்து உடைமைகள் சிலவற்றைமீட்டு வரச் சென்றவர் இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலுக்கு இலக்காகி மரணமானார்.

மானிப்பாய் கட்டுடையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் நா. சரவணமுத்து [வயது 60] என்பவரே உயிரிழந்தார்.

## 27 ஆயிரம் மக்கள் தென்மராட்சியில் தஞ்சம்

தென்மராட்சி, ஜூலை 14

வலி. மேற்கு, வலி. வடக்குப் பகுதிகளில் பெரும் எடுப்பில் மேற் கொள்ளப்படும் படை நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்தவர்களில் 27 ஆயிரத்து 443 பேர் தென்மராட்சிப் பகுதிக்கு வந்து தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் நேற்றுக் காலைவரை சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்களின் படி —

3 ஆயிரத்து 245 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 506 பேர் 27 முகாம்களிலும் —

2 ஆயிரத்து 397 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரத்து 937 பேர் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இடம் பெயர்ந்த மக்கள் தென்மராட்சிப் பகுதிகளை நோக்கி நாளாந்தம் படையெடுத்து வருவதால் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-117]

## மேலும் ஆறு சடலங்கள் அரச செலவில் தகனம்

வலிகாமம் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது உயிரிழந்து இனங் காணப்படாத நிலையில் யாழ். ஆஸ்பத்திரி பிரேத சாலையில் வைக்கப்பட்டிருந்த மேலும் 6 சடலங்கள் நேற்று முன்தினம் அரச செலவில் தகனம் செய்யப்பட்டன.

இந்தச் சடலங்கள் லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டு செம்மணி மயானத்தில் எரிக்கப்பட்டன. (ஐ-15)

## சம்பள முற்பணம்

நிர்மாணத் திணைக்கள ஊழியர்களுக்கான சம்பள முற்பணக் கொடுப்பனவுகள் இன்று வெள்ளி கிழமை இல. 39, சோமசுந்தரம் அவெனியுவில் வைத்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொற்று நோய்கள் பரவலாம்; அனைவரும் சுகாதாரம் பேணுங்கள்!

### மருத்துவ பிரிவு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தற்போது நடைபெறும் இராணுவ நடவடிக்கையால் பல்லாயிரக்கணக்கான மக்கள் குடாநாட்டுக்குள் இடம் பெயர்ந்துள்ளதால் தொற்று நோய்கள் வேகமாகப் பரவும் ஆபத்து உண்டு என்று எச்சரிக்கப்படுகிறது.

முகாம்களிலும். நண்பர்கள் உறவினர்கள் வீடுகளிலும் மக்கள் செறிந்து தங்கியுள்ளதால் தொற்று நோய்கள் பரவி பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என்றும் —

எனவே இத்தகைய பாதிப்புகளில் இருந்து தங்களையும் ஏனையோரையும் பாதுகாக்க அனைவரும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறும் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

★ கொதித்து ஆறிய நீரை அருந்துதல்

★ வீணே நீர் சிந்துவதைத் தடுத்து சகலருக்கும் போதிய அளவு நீர் கிடைக்க உதவுதல்

★ இயன்றளவு சமைத்தவுடன் சூடாகவே உணவை உட்கொள்ளல்.

★ தனிநபர் சுகாதாரம் பேணுதல்.

★ மலகூட சுகாதாரம் பேணுதல்.

★ பொதுக் கழிவுகளை அகற்றுதல்.

இவ்வாறு சுகாதார நடைமுறைகளை அக்கறையுடன் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகின்றது. (ஐ)

### கண்ணீர் அஞ்சலி

**திருமதி குமார் இராசமணி**

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு அவரின் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

நாதன் மருந்தகம்
கல்வியங்காடு

[37535]

### கண்ணீர் அஞ்சலி

**செல்வி தனுஷலா ரவிச்சந்திரன்**

09-7-95 ஞாயிற்றுக்கிழமை எமது பாடசாலைக் குழந்தைச் செல்வம் செல்வி தனுஷலா ரவிச்சந்திரன் (ஆண்டு 8 D மாணவி ) அகாலமரணமானார். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவர்களுடன் துன்பத்தைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

அவரின் [illegible] கின்றோம்.

[illegible], [illegible]
யா / இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

[37527]

## விரைவில் பிடியாணையாம்

கொழும்பு. ஜூலை 14

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவிடம் கையளிக்கத் தேவையான பிடியாணையை விடுக்குமாறு விரைவில் சட்டமா அதிபர் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கவுள்ளதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தப் பிடியாணை தொடர்பாக ஆலோசனைகள் சட்டமா அதிபரால் பாதுகாப்பு அமைச்சிற்கு வழங்கப்பட்டுள்ளன எனவும் இதன்படி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

### தகவல் தரவும்

டச் வீதி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர்களான திருமதி நாகேந்திரம் பரமேஸ்வரி [பேபி], திருமதி கிருஸ்ணபிள்ளை ஆகியோர் இருக்கும் இடத்தை அறிய விரும்புகிறோம்.

தா. ஸ்ரீபாலா

461, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.
(37528)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கந்தையா பார்வதிப்பிள்ளை

கட்டுடையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா பார்வதிப்பிள்ளை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம், ஈஸ்வரன் [மலேஷியா],மகாதேவி, இராஜேந்திரன் (U K), மகேந்திரன் (U.K), இந்திராணி, ஞானாம்பிகை, புவனேஸ்வரன் ஆகியோரின் அருமைத் தாயாரும்,மகேஸ்வரி, தவமலர் (மலேஷியா) பேரின்பநாயகம், ஜெபலக்ஷ்மி, பத்மவசந்தி, அருணாசலம், இராஜலிங்கம், இராசமலர் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல: 50, மார்ட்டின் வீதியில் உள்ள அவரது மகனது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காகப் பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு இன்று (14. 7. 95) காலை 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. பேரின்பநாயகம்
(மருமகன் இன்பம்)

இல: 50 மார்ட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-37327)

### நாகலிங்கம் ஆறுமுகம்

அராலி தெற்கைச் சேர்ந்த நா. ஆறுமுகம் 13 . 7 . 95 இல் காலமானார்.

இவர் வள்ளிநாயகத்தின் அன்புக் கணவரும், சரஸ்வதி, மனோரஞ்சினி, மணிமாலா ஆகியோரின் தந்தையாரும், கருணாகரன், சந்திரஜோதி, வெற்றிவேல் ஆகியோரின் மாமனாரும், கார்த்திகா, கஜந்தினி, கௌதம், விஜுபா ஆகியோரின் பேரனும், கனகரத்தினம், செல்வரத்தினம், காலஞ்சென்றவர்களான அன்னம்மா, நவரத்தினம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

முகவரி
நா.செல்வரத்தினம்
56A, மணிக்கூட்டு வீதி
(வெலிங்டன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

தகவல்
க.சரஸ்வதி
(மகள்)

[37531]

### முருகேசு அருளம்பலம்

[செல்லத்துரை - முன்னாள் வர்த்தகர் றோபெரி - பதுளை]

புங்குடுதீவு 10ஆம்வட்டாரத்தைச்சேர்ந்த முருகேசு அருளம்பலம் கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும், விஜயரெட்னம், பாக்கியலட்சுமி, தெய்வேந்திர நாதன், பேரின்பநாதன் [மிருக வைத்தியர்] விமலாதேவி, [ஆசிரியை பளை], அன்னலக்சுமி நுண்ணாய்வாளர் கிளிநொச்சி அரசினர் வைத்திய சாலை, குணரெட்னம் ஆகியோரின் அன்புத் தந்தையும், மணிமேகலை, மகேஸ்வரன் தர்மகுமாரி, செல்வராணி பாலசுந்தரம், முத்தையா, [அதிபர் றொபெரி] திலகராணி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியை 13- 7- 95 அன்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. பாக்கியலட்சுமி
(மகள்]

359 / 13-A நல்லலக்சுமி அவனியு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[37535]

### திருச்செந்தூர் குணதீசன்

சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகக் கொண்டிருந்த திருச்செந்தூர் குணதீசன் 9- 7- 95 காலையில் ஷெல்லினால் தாக்குண்டு, (13- 7- 95) நேற்று அதிகாலை யாழ். வைத்தியசாலையில் மரணமானார்.

இவர் அழகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி வசந்தகுமாரி சர்வேஸ்வரன் (பிரான்ஸ்), முத்துக்கிருஸ்ணன் (கனடா), திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் நேற்று (13- 7- 95) நண்பகல் 12- 30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சிவனேசன்
[மைத்துனர்]

[37529]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org